இதழ்-96

01.06.2026

பல்சுவை மின்னிதழ்



# பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thu-

**ஆசிரியர்**
ச.சந்தோஷன்

**இணை ஆசிரியர்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**செய்தியியலாளர்**
ச.மதுஷா

**வடிவமைப்பாளர்**
ர.அபிரா
வ. குணநீதன்

**திறனாய்வாளர்**
கு.கீர்த்தனன்


# இவ்விதழில் துமித்தவை....


03 கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதுவோ...?

07 சைவத்தமிழ் இலக்கிய பணியில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்

26 இலங்கை மகளிர் அணியில் மன்னார் வீராங்கனை சஜிந்தினி

27 2026 ஆம் ஆண்டுக்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது.

30 நீர் வள பாதுகாப்பின் அவசியம்

32 சிறகுகள் முளைக்கும் சிகரங்கள்.விசேட தேவையுடைய மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலம்

35 வைபவ் சூரியவன்ஷி எனும் சூறாவளி

ஆசிரியர் பதிவு

# கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதுவோ...?

நம் நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார சவால்களில் மிக முக்கியமானது, எரிபொருள் இறக்குமதிக்காக அரசு செலவிட வேண்டியுள்ள பெரும் தொகையாகும். உலக சந்தையில் எரிபொருள் விலை மாறுபாடுகளுக்கு மத்தியில், பெருமளவிலான அந்நியச் செலாவணியை இதற்காக ஒதுக்க வேண்டியிருப்பதால் அரசுக்கு பெரும் நிதி நட்டம் ஏற்படுகிறது. ஒருபுறம் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் இந்த நட்டம் அமைந்திருந்தாலும், மறுபுறம் நாட்டின் எரிபொருள் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த முரண்பாடான நிலைக்கு நாம் உடனடியாக தீர்வு காணாவிட்டால், அது நாட்டின் எதிர்கால வளர்ச்சியை கடுமையாக பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.



எரிபொருள் தேவை இவ்வளவு வேகமாக அதிகரிப்பதற்கு முதன்மைக் காரணம், வீதிகளில் பெருகிவரும் தனிநபர் வாகனங்களின் எண்ணிக்கையாகும். ஒவ்வொரு குடும்பமும் அல்லது தனிநபரும் சொந்தமாக மோட்டார் சைக்கிள்களையும் கார்களையும் பயன்படுத்துவது ஒரு கௌரவப் பிரச்சினையாகவும், அதேவேளை தவிர்க்க முடியாத தேவையாகவும் மாறியுள்ளது. இதற்கு நேர்மாறாக, நாட்டின் பொதுப் போக்குவரத்துச் சேவை மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளது. பேருந்துகளும் புகையிரதங்களும் முறையான நேர முகாமைத்துவம் இன்றியும், தூய்மையற்றதாகவும், வசதிகள் குறைந்ததாகவும் காணப்படுகின்றன. இந்தத் தரம் குறைந்த பொதுப் போக்குவரத்து முறையினால், நடுத்தர மற்றும் உயர் வருமானப் பிரிவினர் அதனைப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்கின்றனர். இதன் விளைவாக, தனிநபர் வாகனப் பயன்பாடு அதிகரித்து, வீதி நெரிசலும் எரிபொருள் விரயமும் பன்மடங்கு உயர்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு மிகச் சிறந்த மற்றொரு மாற்று வழியாக அமைவது எமது நாட்டில் இயற்கையாகவே கொட்டிக்கிடக்கும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களாகும். வருடம் முழுவதும் தாராளமாகக் கிடைக்கும் சூரிய ஒளி, கடலலை, நீர்வீழ்ச்சி, காற்று போன்ற இயற்கை வளங்கள் சூழ்ந்த நாடாக நம் நாடு இருந்தபோதிலும், இவற்றை நாம் ஆற்றலாக மாற்றிப் பயன்படுத்துவது மிகக் குறைவாகவே உள்ளது. தற்போதைய நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களின் மூலம் ஆங்காங்கே சூரிய சக்தி (Solar Power) மின்னுற்பத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அதில் ஒரு பெரிய குறைபாடு நீடிக்கிறது.





பகல் நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இரவு நேரப் பயன்பாட்டிற்காகவோ அல்லது அவசரத் தேவைகளுக்காகவோ சேமித்து வைப்பதற்கான முறையான, பெரிய அளவிலான மின்கல (Battery Storage) வசதிகள் நம்மிடம் இல்லை. இதனால், உற்பத்தி செய்யப்படும் தூய்மையான ஆற்றலைக் கூட நாம் வினைத்திறனுடன் பயன்படுத்த முடியாமல் வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின், அரசு உடனடியாக சில தீர்க்கமான உத்திகளைக் கையாள வேண்டும். முதலாவதாக, எரிபொருள் தேவையை நேரடியாகக் குறைப்பதற்கு பொதுப் போக்குவரத்துத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். தூ ய்மையான, குளிர்சாதன வசதி கொண்ட, நவீன மற்றும் சரியான நேரத்திற்கு இயங்கக்கூடிய பேருந்து மற்றும் புகையிரதச் சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மட்டுமே தனிநபர் வாகனப் பயன்பாட்டாளர்களை பொதுப் போக்குவரத்தை நோக்கி ஈர்க்க முடியும். மின்சாரப் பேருந்துகளை (Electric Buses) இறக்குமதி செய்வதன் மூலம் எரிபொருள் இறக்குமதியை பெருமளவு கட்டுப்படுத்தலாம்.

அடுத்ததாக, புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாட்டை வெறும் உற்பத்தியோடு நிறுத்தாமல், அதன் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதில் அரசு முதலீடுகளைச் செய்ய வேண்டும். சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்தை பெரிய அளவில் சேமிக்கக்கூடிய நவீன “கிரிட்-லெவல்“ (Grid-level System) மின்கல சேமிப்பு நிலையங்களை நிறுவ வேண்டும். வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் சூரியக் கலங்களை பொருத்துவதற்கு மானியங்களும், உபகரணங்களை இறக்குமதி செய்ய வரி விலக்குகளும் வழங்கப்பட வேண்டும். உற்பத்தி செய்யப்படும் மேலதிக மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் சேமித்து, தேவைப்படும் போது விநியோகிக்கும் “நெட் மீற்றரிங்“ (நேவ ஆநவநசயைபெ) முறையை மேலும் எளிமையாக்க வேண்டும்.

இறுதியாக, மின்சார வாகனங்களின் (EV) பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான உட்கட்டமைப்புகளை நாடு முழுவதும் உருவாக்க வேண்டும். ஆங்காங்கே விரைவு மின்சார மீள்நிரப்பு நிலையங்களை (Fast Charging Stations) அமைப்பதன் மூலமும், இந்த நிலையங்களுக்குத் தேவையான மின்சாரத்தை சூரிய சக்தி மூலம் வழங்குவதன் மூலமும் தூய்மையான பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நாம் நகர முடியும்.

சுருக்கமாகக் கூறின், எரிபொருள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது என்பது தேவைகளை முடக்குவது அல்ல, மாறாக மாற்று வழிகளை நோக்கித் திரும்பட பயணிப்பதே ஆகும். தரமான பொதுப் போக்குவரத்து மற்றும் முறையான சேமிப்பு வசதிகளுடன் கூடிய புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய இரு தூண்களைப் பலப்படுத்துவதன் மூலம் மட்டுமே, அரசு தன் நட்டத்தைத் தவிர்த்து, நாட்டை ஒரு சுயசார்புப் பொருளாதாரப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும். காலத்தின் கட்டாயமாக எழுந்துள்ள இந்த மாற்றத்திற்கு அரசும், பொதுமக்களும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய தருணம் இதுவே.

“வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.”



# சைவத்தமிழ் இலக்கிய பணியில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்

ஐ.வி.மகாசேனன்


## அறிமுகம்:

ஒரு மொழி மற்றும் பண்பாட்டு இருப்பிற்கு இலக்கிய உருவாக்கங்கள் அவசியமாகின்றது. இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகவும் தலைமுறைகளுக்கான ஊடகமாகவும் செயலாற்றுகின்றது. புண்பாடு மற்றும் மொழிக்காக பணியாற்றும் பல போராளிகளின் கருவியாக இலக்கியங்கள் அமைந்துள்ளது. அத்தகைய கருவியை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களும், தன்னுடைய மொழி மற்றும் பண்பாட்டின் இருப்பை பேணி வளர்க்கும் பணியில் பயன்படுத்தி உள்ளார். திருமுருகன் ஐயா அவர்களினை சமயத் தலைவராக அவரது சொற்பொழிவு, ஆலய பரிபாலனம் மற்றும் ஆலய நிர்மானங்கள் போன்றவற்றினூடாக வரையறுக்கும் பொதுத் தன்மை காணப்படுகின்றது. ஈழத்தில் சைவ சமயப் பணி என்பது தமிழ் மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒருங்கிணைந்தது என்பது நிராகரிக்க முடியாத எதார்த்தமாகும். இலங்கையின் அரசியலில் தொடரும் ஆக்கிரமிப்புக்களும் அதனையே உறுதி செய்கின்றது. இவ் ஒழுங்கிலே திருமுருகன் ஐயா அவர்கள் சைவ சமயத்தின் முகவரியில் தமிழன்னையை இலக்கியங்களால் அலங்கரிக்கும் கைங்கரியத்தை ஆற்றி வருகின்றார். இக்கட்டுரை எதிர்கால ஆய்வானர்களுக்கு புதிய தேடலுக்கான ஆய்வுப்பொருளை வழங்கக்கூடியதாக, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களின் இலக்கியப் பணியை அடையாளங்காண்பதாகவும் தொகுப்பதாகவுமே உருவாக்கப்பட்டுள்ளது.




திருமுருகன் ஐயா அவர்கள் இதழாசிரியராக, நூலாசிரியாக, பதிப்பாசிரியராக மற்றும் இளம் தலைமுறைகளை இலக்கியப்பணியில் ஒருங்கிணைக்கும் வழிகாட்டியாகவும் பல பரிணாமங்களை இலக்கியப் பணிக்கு வழங்கி வருகின்றார். இதற்கான ஆரம்பத்தை யாழ். இந்துவின் மைந்தனாக அன்னை மடியில் பெற்றுள்ளார். 1978ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவனாக

‘யாழ்மதி’ எனும் கையெழுத்து பிரதியை வெளியிட்டிருந்தார். இவ நடைமுறை இந்துவின் இளவல்களுக்கு தனித்துவமானது. இக்கட்டுரையாளர் 2005-2013 காலப்பகுதியில் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற அனுபவத்திலும் சகாக்களின் கையெழுத்து பிரதி அனுபவங்கள் நிறைவாய் உள்ளது. இக்கட்டுரையை வெளியிடும் துமி அமையத்தின் உருவாக்கமும் அவ்வகையிலான ஒன்றின் தொடர்ச்சியாகவே அமைகின்றது. இது இந்துவின் மைந்தர்களின் அனுபவமாகும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அன்னை மடியில் கிடைக்கப்பெற்ற கையெழுத்து பிரதி உருவாக்க அனுபவத்தை அத்திவாரமாய் கொண்டு திருமுருகன் ஐயா அவர்கள், ஏறத்தாழ ஐந்து தசாப்தங்கள் பல்வேறுபட்ட இதழ்களையும், நூல்களையும், ஆவணப் பெட்டகங்களையும் உருவாக்கியுள்ளார்.



யாழ்மதி வளர வாழ்த்துகிறுர்

இ. மகாதேவா (தேவன்-யாழ்ப்பாணம்.)

(யாழ்மதி ஆரம்பத்தில் கையெழுத்துப் பிரதியாக நடமாடியபோது)

கையெழுத்துப் பிரதிகளாக வெளிவந்த சஞ்சிகைகள் பல. அவற்றில் சில அச்சேறியதும் உண்டு, அருகியதும் உண்டு. ஆனல் அவை மூலம் உருவான எழுத்தாளர்கள் பிரபலம் பெற்றிருக்கிறுர்கள். தமிழுக்கு அழகு செய்திருக்கிறுர்கள். அந்த வரிசையில் வெளிவரும் ''யாழ்மதி'' தமிழுக்கு உயிரும் ஊட்டமும் அளிக்கும் என்பதை இந்த இதழ் கட்டியம் கூறுகிறது. கட்டுரை, கவிதை, சிறுகதை, தொடர் கதை, நகைச்சுவை யாவும் இளம் எழுத்தாளர்களால் சுயமாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பது எந்த ரசிகனின் கவனத்தையும் ஈர்க்கத்தவறுது.

''தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு.''

''யாழ்மதி'' அறிவூட்டும் ஐயமில்லை.

ஆசிரியர் திருமுருகனுக்கும் அவர் குழாத்துக்கும் என் வாழ்த்துக்கள்

தேவன் - யாழ்ப்பாணம்.

## இதழாசிரியர்:



ஹவாய் சைவ ஆதீன முதல்வர் இந்து ஒளி இதழை வெளியிட்டு வைக்கிறார். அருகே மாமன்றத் தலைவரும், கலாநிதி ஆறு.திருமுருகனும்.

ஆறு. திருமுருகன் ஐயா மூன்று சைவத்தமிழ் சஞ்சிகைகளில் இதழாசிரியராகவும் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் செயலாற்றி வருகின்றார். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான ‘இந்து ஒளி’ ஆசிரியர் குழு உறுப்பினராகவும், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய மாதாந்த சஞ்சிகையான ‘அருள் ஒளி’ மற்றும் சிவபூமி அறக்கட்டளையின் மாதாந்த சஞ்சிகையான ‘சிவபூமி’ என்பவற்றின் இதழாசிரியராக உள்ளார். இதழாசிரியராக அவர் எழுதிவரும் ஆசிரியர் பதிவுகள் தொகுக்கப்பட வேண்டிய பெரும் தனிப்பெரும் இலக்கியமாகும். சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் ஆசிரியர் பதிவு மையமானதாகும்.


அது காலத்தை பிரதிபலிப்பதுடன், ஆசிரியர் எண்ணங்களில் சமூக மாற்றங்களுக்கான செய்தியாகவும் அமையக்கூடியதாகும். இவ்ஒழுங்கை திருமுருகன் ஐயா அவர்களின் இதழாசிரியர் பதிவுகளும் வெளிப்படுத்துகின்றது. இதழாசிரியராக சைவத்தமிழ் சமூக சூழலை வேறுபட்ட பரிமானங்களில் ஆசிரியர் பதிவுகளில் வழங்கி வருகின்றார். இந்து மாமன்றத்தின் இந்து ஒளி இதழானது 1996ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் காலாண்டிதழாக ஆரம்பிக்கப்பட்டது. இது ஏறத்தாழ நான்கு முதல் ஐந்து ஆளுமைகள் ஒன்றிணைந்த ஆசிரியர் குழுவாக வடிவமைக்கப்படுகின்றது. ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவராகவும் யாழ் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமாக நீண்டதொரு உறவுத்தொடர்ச்சியை இந்து மாமன்றத்துடன் பேணி வருகின்றார்.

இந்த வரிசையிலேயே 2012ஆம் ஆண்டு முதல் இந்து ஒளியின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் செயலாற்றுகின்றார். இந்து ஒளியின் முதலாவது இதழில் உருவாக்க நோக்கம் பற்றிய குறிப்பில், '....இலங்கை இந்து மாமன்றம் தன் தலைமையகக் கட்டிடத்தை பூர்த்தி செய்து கொண்ட பின், இந்நாட்டின் இந்து மக்களுக்குச் சமய அறிவைப் புகட்டும் வழியில் நல்லதொரு சஞ்சிகையை வெளியிட வேண்டும் என விளைந்தோம். இந்து மக்களிடையே சமய அறிவை வளர்க்கவல்ல ஒளியாக இந்து ஒளி விநாயகப்பெருமானின் திருவருளுடன் ஏற்றப்படுகின்றது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் உருவாக்க நோக்கத்தை பாதுகாக்கும் வகையிலேயே சமகாலம் வரையில் இந்து ஒளி இதழ் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. அதனொரு பகுதியாக ஆசிரியர் குழுவில் ஆறு. திருமுருகன் ஐயா பணியாற்றுகின்றார் என்பதோடு, சிறப்பிதழ்களில் அதற்குரிய முக்கியத்துவத்தை தமது அனுபவங்களினை இளைய தலைமுறைக்கு சைவத் தமிழர்களுக்கும் வழங்கும் வகையில் கட்டுரைகளையும் எழுதி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அருள் ஒளி, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மாதாந்த சஞ்சிகையாக 2002ஆம் ஆண்டு ஆவணி திருவோணம் முதல் வெளிவருகின்றது. அருள் ஒளியின் முதல் இதழ் தொடக்கம் அன்னை


உ
அருள் ஒளி
(மாதாந்த சஞ்சிகை)
ஆசிரியர்
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்
2002 சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம்
வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.
மலர் 3

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுடன் ஆறு. திருமுருகன் ஐயா ஆசிரியராக செயற்பட்டு வருகின்றார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பல அறப்பணி வரிசைகளில் ஒன்றாகவே, மக்களுக்கு ஆன்மீக கருத்துக்களை எடுத்துரைக்கும் பணியை அருள் ஒளி நிறைவேற்றி வருகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களாக அருள் ஒளி இதழின் ஆசிரியர் பதிவு, சைவ சமயத்தை வெறுமனவே ஆகம நெறிமுறைகளுக்குள்ளும் சைவசித்தாந்தம் மற்றும் வேதங்கள் எனும் இலக்கியங்களுக்குள்ளும் சுருக்காது சைவ சமூகத்தின் எதார்த்தங்களை பிரதிபலிப்பதாகவே அமைந்து வருகின்றது. இது சமயத்தை சமூகத்துடன் ,ணைக்கும் பெரும் செயலாற்றுகின்றது. அருள் ஒளி இதழின் முதலாம் ஆண்டு நிறைவு மலரின் ஆசிரியர் பதிவில், இந்துமதம் பற்றி ஏராளமான நூல்கள் இது வரை வெளிவந்த போதிலும் இன்று வாழும் மனிதன் கற்றுணரக்கூடிய நூல்கள் வெளிவருவது மிகக்குறைவு. எனவே யதார்த்த உலகிற்குப் பொருத்தமான வாழ்வியலுக்கு உகந்த ஆன்மீக செய்திகளை வெளியிட வேண்டுமென அருளொளி ஆதங்கம் கொள்கின்றது. புராண நூல்களில் காணப்படும் அரிய கருத்துக்களை இன்றைய சமூகம் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் புதுமையாய் வழங்க வேண்டியது ஆக்கவியலாளரின் கட்டாய கடனாகும்' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் ஆதங்கத்தை அருள் ஒளியின் ஆசிரியர் பதிவினூடாக ஆறு. திருமுருகன் ஐயா செவ்வனவே நிறைவேற்றி வருகின்றார். அறநெறிப் பாடசாலைகளின் தேவைப்பாடு, இயற்கை வழிபாட்டின் முக்கியத்துவம், நிறுவன ரீதியாக சைவ சமயத்தை பாதுகாத்தல், ஆலயங்களில் கேளீக்கைகள் என்ற போர்வையில் அதிகரித்தும் வரும் பண்பாட்டு சிதைவுகளுக்கு எதிரான அறச்சீற்றம் என அருள் ஒளியின் ஆசிரியர் பதிவுகள் சமுக எதார்த்தத்துடன் சமயத்தை இணைப்பதாக இருந்து வருகின்றது.




2018ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் சிவபூமி அறக்கட்டளையினால் 'சிவபூமி' மாதாந்த செய்திப் பத்திரிகை வெளியிடப்படுகின்றது. இவ் மாதந்த பத்திரிகை இந்து சமயம் மற்றும் சமூகம் சார்ந்த கட்டுரைகள், கவிதைகள் ஆலய உற்சவங்கள் மற்றும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட செய்திகள், படங்கள் இந்துக்களின்

விசேட தினங்கள் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள் சிவபூமி அறக்கட்டளை செயற்பாடுகள் தொடர்பான செய்திகள் என பரந்துபட்ட அடிப்படையில் சைவத்தமிழ் செய்திகளின் தொகுப்பை கொண்டுள்ளது. இதன் ஆசிரியராகவும் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகரும் தலைவருமான ஆறு. திருமுருகன் ஐயா செயற்பட்டு வருகின்றார். சிவபூமி அறக்கட்டளையின் மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியர் பதிவுகள் தமிழ் சமூகத்தின் நிறை குறைகளின் பிரதிமைகளை காலத்தின் கண்ணாடியாக வெளிப்படுத்தி வருகின்றது. குறிப்பாக விவசாயப் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டிய தேவைப்பாடு, தறிகெட்டு செல்லும் இளையோர் புனர்வாழ்வின் தேவைப்பாடு, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வீழ்ச்சியடையும் பொதுப்பரீட்சை பெறுபேறுகளை சீர்செய்வதற்கான ஆலோசனைகள் என்ற வடிவத்தில் சிவபூமி இதழின் ஆசிரியர் பதிவுகள் அமைகின்றது. முழுமையாக ஆறு. திருமுருகன் ஐயாவின் சமூகம் சார்ந்த அக்கறையும் சமூக மாற்றத்திற்கான செய்திகளும் சிவபூமி மாதாந்த பத்திரிகையின் ஆசிரியர் பதிவில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. 2021ஆம் ஆண்டு மார்ச் சிவபூமி பத்திரிகையில் ‘நிலங்களை வெற்றிடயங்களாக விடாதீர்கள்’ எனும் தலைப்பிலான ஆசிரியர் பதிவில், ‘போருக்கு பின்னர் பாவனை இழந்த நிலங்கள் இராணுவ பயன்பாட்டுக்கு உட்படும் நெருக்கடியையும், அதனை சீர்செய்ய குறைந்தபட்சம் உறவினர்களுக்கும் நிலமற்றவர்களுக்கும் குத்தகைக்காவது காணியை பகிர்வது பொருத்தமானது எனும் ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி ஆசிரியராகவும், அதிபராகவும் மற்றும் தேசங்கள் திரியும் சொற்பொழிவாளராகவும் பல்பரிமாண அனுபவங்களின் தொகுப்பு இதழாசிரியர் பதிவுகளையும் இதழ் கட்டமைப்பையும் செழுமைப்படுத்துகின்றது. சமீப கால முதிர்ச்சி சமூகப் பிறள்வுகள் மற்றும் அசமந்தங்களுக்கு எதிரான அறச்சீற்றத்தையும் இதழாசிரியராக பதிவு செய்து வருகின்றார். எழுத்தாளர்கள் சில சந்தர்ப்பங்களில் விமர்சகர்களாய் மாத்திரம் செயலாற்றி சென்றுவிடுவதுண்டு. குறைகளை விமர்சிக்கையில் மாற்றுத்தீர்வை பரிந்துரைப்பதில்லை என்பது எழுத்தாளர்கள் மீதான குறையாகவும் காணப்படுகின்றது. எனினும் திருமுருகன் ஐயா அவர்களுடைய அனுபவ விரிவும் முதிர்ச்சியும் ஆசிரியர் பதிவுகளை நிறைவு செய்கின்றது. சமூக பிறழ்வுகளை கண்டு வேதனைப்படும் ஆசிரியர் பதிவுகளில் அதனை களைவதற்கான முன்யோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

**நூலாசிரியர்:**

ஆறு. திருமுருகன் ஐயா நூலாசிரியராகவும் சைவத் தமிழ் பணிக்கான நூல்கள் பல உருவாக்கி தந்துள்ளார். நூலாசிரியராக ஆவணப்படுத்தல்களுக்கே முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார். தமிழ் மக்களிடம் மிகவும் பலவீனமானதொரு பகுதியாகவும் இவ்ஆவணப்படுத்தலே காணப்படுகின்றது. 'கல் தோன்றி மண் தோன்றா காலத்து மூத்த குடிகள்' என தமிழர்கள் தம் வரலாற்றை விழிப்பதுண்டு. இன்று விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள பலவற்றையும் சைவத் தமிழ் இலக்கியங்களும் மரபுகளும் என்றோ ,யல்பாக்கி உள்ளது. எனினும் அறிவியலை மேற்கு சார்ந்திருப்பதும், நாகரீகத்தை மேற்கிலிருந்து ஒப்பிடுவதும் தமிழர் தம் வரலாற்றை சீராக ஆவணப்படுத்த தவறியதன் விளைவாகவே அமைகின்றது. ஈழத்தில் தமிழர்கள் தம் இருப்புக்காக போராடுவதும் ஒரு வகையில் வரலாற்றில் மூதாதையர் தம் வரலாற்றை சரியாக ஆவணப்படுத்த தவறியதன் பேறாகவே காணப்படுகின்றது. இவ்அனுபவங்களின் வெளிப்பாடுதானோ ஆறு. திருமுருகன் ஐயாவின் நூல்கள் ஆவணப்படுத்தல் எனும் மையக் கருவில் ஒருங்கிணைகின்றன.





2003ஆம் ஆண்டு சீர் இணுவில் திருவூரில் இயங்கும் சிவகாமி அறநெறிப் பாடசாலையின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவாய் வெளியிடப்பட்ட 'அறநெறிக் களஞ்சியம்' என்ற நூலின் ஆசிரியராய் ஆறு. திருமுருகன் ஐயா செயற்பட்டுள்ளார். இந்நூல், 21 கல்விமான்கள் அறிஞர்களின் சைவத்தமிழ் வாழ்வியல் மற்றும் இணுவில் பண்பாட்டியல் தொடர்பான பெறுமதியான கட்டுரைகளையும், இணுவில் சிவகாமி அன்னையின் பெருமைகள் பற்றி மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட 51 கீர்த்தனைகளையும் உள்ளடக்கிய சைவத்தமிழை போற்றும் நூலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் வாசிப்பினூடாக அறச்சிந்தனைகளையும், ஆன்மீகக்கருத்துக்களையும், இணுவைத் திருவூர் சைவமரபின் மாண்பையும் அறியக்கூடியதாக அமையும் என்ற செய்தியை




வெளியீட்டுரையில் ஆறு. திருமுருகன் ஐயா வழங்கியுள்ளார். இந்நூலினை சிவகாமி அறநெறிப் பாடசாலையை ஆற்றுப்படுத்தும் இணுவில் சைவத் திருநெறிக் கழகம் வெளியீடு செய்துள்ளது.

ஆறு. திருமுருகன் ஐயா அவர்களை பின்தொடர்பவர்கள், ஐயாவின் சொற்பொழிவுகள் மற்றும் உரைகள் பதிவுசெய்யப்பட்டு ஆவணப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றார்கள். ஒரு சில உரைகள் ஆரம்ப காலங்களில் ஐயாவின் அன்பர்களால் காணொளி பதிவு செய்யப்பட்டுள்ளது. சமகால இணைய உலகில் வலையொளிகளில் (YouTube) செறிந்து காணப்படுகின்றது. துமி அமையமும் ஒரு சில காணொளிகளை வலையொளியில் சேமித்துள்ளது. அவ்வாறே ஒரு பயண அனுபவமும் நூலாக்கம் பெற்றுள்ளது. 2004ஆம் ஆண்டு ஆறு. திருமுருகன் ஐயாவின் அமெரிக்க பயண அனுபவம், ‘அமெரிக்காவை நோக்கிய ஆன்மீகப் பயணம்’ என்ற தலைப்பில் 2005 ஜனவரியில் பதிப்பு பெற்றுள்ளது. இப்பதிப்பு முயற்சியும் ஐயா மீது அளவற்ற அன்பு கொண்டோரின் தூண்டுதலும் முயற்சியும் என்பதை முகவுரையில் பதிவு செய்துள்ளார். அமெரிக்காவின் சிக்காக்கோ மாநகரில் உரையாற்றல் என்பது சைவ உலகில் பெரும் வரலாற்றின் மகிழ்வை தரக்கூடியதாகும். 1893ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோவில் ஆற்றிய உரை வரலாற்று சிறப்புமிக்கதாகும். ஆறு. திருமுருகன் ஐயாவின் தனிப்பட்ட வாழ்விலும் அமெரிக்க பயணம், அமெரிக்க அழைப்பு என்பது நிராகரிக்கப்பட்ட இடமொன்றில் கௌரவம் பெறும் மகிழ்வாகும்.





அம்மகிழ்வு அமெரிக்காவை நோக்கிய ஆன்மிகப் பயணக் கட்டுரையில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உதயன் பத்திரிகையில் எழுதப்பட்ட கட்டுரையே ஆறு. திருமுருகன் ஐயாவின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அன்பரின் பிடிவாதத்தில் நூலாக்கம் பெற்றது.

பின்னர் 2007ஆம் ஆண்டு ஆறு. திருமுருகன் ஐயாவின் வெளிநாட்டு சொற்பொழிவொன்று ஆங்கில நூல் வடிவத்தை பெற்றது. 2000ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய சிட்னி முருகன் ஆலயத்தில் ஆறு. திருமுருகன் ஐயா வழங்கிய சொற்பொழிவு, 2007ஆம் ஆண்டு ஆங்கில மொழியில் நூலாக சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது. 'Aaru Thirumurugan's Spiritual Lectures on Life and Philosophy' என்னும் தலைப்பில் அந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இலக்கிய சுவைக்காக அதற்குரிய பாண்டித்திய இலக்கணங்களில் வகுக்கப்பட்ட திருமுறைகளையும், திருமந்திரத்தையும் இலகுமொழியில் மக்கள் வாழ்வியலுடன் சுவாரஸ்யமாக சொல்லக்கூடிய திறனை ஆறு. திருமுருகன் ஐயா கொண்டுள்ளார். அவ்எளிமை அவரது உரையின் எழுத்து வடிவிலும் செழுமை பெறுகின்றது. அதனை மொழிபெயர்ப்பாளரும் சரியாக உள்வாங்கியே நேர்த்தியாக செய்துள்ளார்.

பாடல்களை அதற்குரிய வீரியமான தமிழிழேயே குறிப்பிட்டு, விளக்கத்திற்கு ஆங்கில மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலின் உள்ளடக்கம் திருமுறை மற்றும் திருமந்திரம் கூறும் வாழ்க்கை தத்துவங்களை விபரிக்கிறது. மேலும் மூன்றாவது அத்தியாயத்தில் சைவ சமய வாழ்வை அறத்துடன் வாழின் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற செய்தியையும் வழங்குகின்றது. இந்நூல் ஆங்கில மொழிபெயர்ப்பு என்பதால் புலம்பெயர் தேசங்களில் மொழியை இழந்து வாழும் ஈழத்தின் அடுத்த தலைமுறைக்கு சமய வாழ்வின் நன்மையை புரிந்து கொள்ள பயனுடையதாக அமைகிறது.





சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூசை தின வெளியீடாக 2009ஆம் ஆண்டு, 'தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்' எனும் தலைப்பிலான புத்தகத்தை அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியீடு செய்தது. இப்புத்தகத்தின் தொகுப்பு ஆசிரியர்களாக அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் கந்தையா நீலகண்டன் ஐயா அவர்களுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களும் செயற்பட்டுள்ளார்கள்.




அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத்தமிழ் உலகின் பெரும் பொக்கிஷம் என்பதை கடந்து, ஆறு. திருமுருகன் ஐயா அவர்களுக்கு ஞானக்குருவாகவும் ஞான அன்னையாகவும் செயற்பட்டு இருந்தார்கள் என விழிப்பது பொருத்தமானதாக அமையும். அவ்ஞான அன்னையை ஆவணப்படுத்தும் ஓர் நூலுருவாக்கத்துக்கும் ஆறு. திருமுருகன் ஐயாவே பொருத்தமானவர். ஆதலாலேயே அகில இலங்கை இந்து மாமன்றமும் அன்னையின் குருபூசை மலருக்கான தொகுப்பாசிரியராக ஐயாவை பிரதானமாக தேர்ந்தெடுத்தும் உள்ளது. அக்கடமையை அவரும் செழுமையாக நிறைவேற்றி உள்ளமையை நூலின் உள்ளடக்கங்கள் உறுதி செய்கின்றது. சிவத்தமிழ்ச்செல்வியின் பன்முகப் பணிகள் பல ஆளுமைகளின் பார்வைகளில் ஊடாக தொகுக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக ஆலய வழிபாட்டு நெறிமுறை வளர்ச்சி மற்றும் மறுமலர்ச்சி, ஆதரவற்றோருக்கான தாய்க் கருணை, அறப்பணியின் மேன்மை, ஆசிரியப்பணி, சர்வதேச அங்கீகாரம் என பல்நோக்கு கண்ணோட்டத்திலான கட்டுரைகள் சிவத்தமிழ்ச்செல்வியின் வரலாற்றை முழுமையாக கட்டமைத்துள்ளது. மேலும் சிவத்தமிழ்ச்செல்வியின் வரலாற்றை காட்சிப்படுத்தும் புகைப்படத் தொகுப்பும் நூலின் முழுமைத் தன்மையை உருவாக்கியுள்ளது. வரலாறு படைத்த ஒரு தெய்வீக அன்னையின் வரலாற்றை ஒரு நூலில் அடைத்து விட முடியாது என்பதே எதார்த்தமாகும். ஆன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்பில் பல நூல்கள் உருவாகி உள்ளன. உருவாக்கம் பெறுகின்றன. 2025ஆம் ஆண்டு அன்னையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ‘தங்க தமிழ்’ எனும் தலைப்பில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தால் மலர் வெளியிடப்பட்டது. இந்நூலின் ஆசிரியராகவும் ஆறு. திருமுருகன் ஐயாவே செயற்பட்டுள்ளார்.

இந்நூல் நூற்றாண்டில் அன்னையின் மகிமை போற்றும் கல்வியாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும், நூற்றாண்டில் அன்னையின் எழுத்துக்களும் தொகுக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.





சிவத்தமிழ்ச்செல்வின் அறக்கருத்துக்கள் எக்காலத்துக்கும் பொருத்தமானது என்பதையே அத்தொகுப்பு விளக்க முற்படுகின்றது. ஞான அன்னைக்கான நூலுருவாக்கத்தில் ஆறு. திருமுருகன் ஐயாவின் அர்ப்பணிப்பு ஒரு படி அதிகரிக்கின்றமை நூல்களின் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அன்னை சிவத்தமிழ்ச் செல்வியை போற்றி பல நூல்கள் உருவாகியுள்ள போதிலும், ஆறு. திருமுருகன் ஐயா ஆசிரியராக உருவாக்கியுள்ள 'தெய்வத்திருமகளின் வாழ்வும் பணியும்' மற்றும் 'தங்கள தமிழ்' ஆகிய நூல்கள் தனி நிலையை பெறுகின்றன.

சைவத்தமிழ் அறிஞர்களை பொறுத்தவரை ஈழத்தில் பெரும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. போர் தின்ற பூமி என்ற நிலையில் அறிஞர்களும் ஆற்றலாளர்களும் நலிந்து போயுள்ளது. செயற்படும் ஒருசிலரிடமே கோரிக்கைகளும் குவிகின்றது. அதுமாத்திரமின்றி செய்பவரிடமே எதிர்பார்ப்பும் காணப்படும். அத்தகைய எதிர்பார்ப்புக்களில் ஒப்படைக்கப்படும் பணியை, ஆறு. திருமுருகன் ஐயா இறையாசியுடன் செழுமையாகவும் நிறைவேற்றிக் கொள்கின்றார். 2016ஆம் ஆண்டு நாவலரை இன்றைய தலைமுறைக்கு அறியவைக்கும் இந்து சமய காலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முயற்சியில் 'சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்' எனும் நூல் உருவாக்கம் இடம்பெற்றது. இந்நூலுக்கான ஆசிரியர் பணியை திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஆறு. திருமுருகன் ஐயா நிறைவேற்றி உள்ளார். ஆறுமுக நாவலர் சைவமும் தமிழும் காலனித்துவ நெருக்கடியில் இன்னல்களை எதிர்கொண்ட காலப்பகுதியில்




தோன்றினார். தனது நாவன்மையாலும் எழுத்தாலும் சைவத்துக்கும் தமிழுக்கும் நாவலர் பெருமான் புத்துயிர் அளித்தார். பலரும் ஆறு. திருமுருகன் ஐயாவின் பணியை நவீன நாவலர் என்ற அடைமொழியில் விழிக்கும் நிலையில், திணைக்களமும் பொருத்தமானவரிடமே பொறுப்பான பணியை ஒப்படைத்துள்ளார்கள்.




ஆறு. திருமுருகன் ஐயாவின் நூலாசிரியர் பணியில் ஆவண பெட்டகம் கணதியானதும் ஈழத் தமிழர் வரலாற்றில் முக்கியமானதாகவும் காணப்படுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா ஒரு குறிப்பில், 'செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களது சேவைகள் அளப்பரியன. திருக்கேதீச்சரத்தலத்தின் இலக்கியப் பெட்டகம், ஆவணப் பெட்டகம் என்பன நடமாடும் தகவல் களஞ்சியத்தின் உரைகற்களாகும். சிவபூமி அறக்கட்டளையினூடாக ஆற்றிவரும் சேவைகள் பழைமைசார் மரபுகளை அழியாப்பெருமையோடு பாதுகாக்கும் பணிகளாகும்' எனச் சிறப்பித்துள்ளார். இது நிதர்சனமாகும். 2022ஆம் ஆண்டு 'திருக்கேதீச்சரம்: ஆவணப் பெட்டகம்' எனும் நூலும் 2023ஆம் ஆண்டு 'திருக்கேதீச்சரம்: இலக்கிய பெட்டகம்' எனும் நூலும் ஆறு. திருமுருகன் ஐயா அவர்களினால் வெளியீடு செய்யப்பட்டது. 'திருக்கேதீச்சரம்: ஆவணப் பெட்டகம்' எனும் நூல் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சரம் ஆலயத்தின் நீண்டகால வரலாறு, தொல்லியல் சான்றுகள் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை ஒரு தொகுப்பில் ஆவணப்படுத்தும் ஒரு முக்கிய நூலாகும்.

'திருக்கேதீச்சரம்: இலக்கிய பெட்டகம்' எனும் நூல் இலங்கையில் பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சரத்தின் சிறப்பை இலக்கிய வழியே எடுத்துரைக்கும் சைவ இலக்கியங்களின் தொகுப்பை ஆவணப்படுத்தும் நூலாகவும் அமைகிறது. மன்னார் மாதோட்ட நகர், இலங்கை எனும் சிவபூமியில் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கேதீச்சர நாதன் உறையும் பூமியாக அமைகிறது. எனினும் சமகாலத்தில் ஈழ அரசியல் சமூக முரண்பாட்டு சூழலில், திருக்கேதீச்சர வரலாறு மறக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு சூழலில் வாய்வீச்சுக்களை கடந்து, செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆறு. திருமுருகன் ஐயா, திருக்கேதீச்சர சிறப்பையும் முக்கியத்துவத்தையும் தொண்மையையும் ஆவணமாக தலைமுறைகளின் பார்வைக்கு கொண்டு செல்லும் முனைப்பில் வரலாற்று ஆவணத்திற்கானதொரு ஆவண பெட்டகத்தையும் இலக்கிய ஆவணத்திற்கானதொரு ஆவண பெட்டகத்தையும் நூல் வடிவில் உருவாக்கி தந்துள்ளார்.




19ஆம் நூற்றாண்டில் நல்லை நகர் நாவலர் ‘தேன் பொந்து ஒன்று உள்ளது’ என்ற செய்தியூடாக காடாகிக் கிடந்த திருக்கேதீச்சர மீட்சியை ஏற்படுத்தினார். 21ஆம் நூற்றாண்டில் செஞ்சொற்செல்வர் ‘“ஆவணப் பெட்டக நூல்கள்’ உருவாக்கத்தினூடாக வரலாற்று தொன்மை சிறப்பு மறக்கப்படும் திருக்கேதீச்சர ஆவண மீட்சியை ஏற்படுத்தியுள்ளார். இந்நூல்களை வெளியீடு செய்த தமிழியற் கழகம் வெளியீட்டுரையில், ‘காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து, வேறு எவராலும் செய்தற்கரிய சேவைகளைச் செய்து வருபவரான கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள், ஆவணப்படுத்தலின் தேவையையும் நன்கு உணர்ந்தவர்’ என விழித்துள்ளார். அவ்விழிப்பின் பொருத்தப்பாடு காலங்கருதி திருக்கேதீச்சரத்திற்கான ஆவணப்பெட்டகம் உருவாக்க ஏற்பட்ட சிந்தனையும், அவ் ஆவணப் பெட்டக நூல்களின் முக்கியத்துவமும் உறுதி செய்கிறது.

நூல்கள் புதிய அறிவை வழங்குவதுடன், புதிய தேடல்களுக்கான அடித்தளமாகவும் அமைய வேண்டும். 2025ஆம் ஆண்டு இறுதியில் ஆறு. திருமுருகன் ஐயாவால் வெளியிடப்பட்ட ‘கர்மயோகி: லேடி இராமநாதன்’ எனும் நூல், லேடி இராமநாதன் பற்றிய புதிய பார்வையை வழங்கியது. இந்நூலை வாசிக்கையில், ஒருவகையில் இந்தியாவில் அன்னை திரேசா கொண்டாடப்படுவது போன்று ஈழத்தில் லேடி இராமநாதன் கொண்டாடப்பட வேண்டியவர் என்ற எண்ணம் உருவாக்கப்படுகின்றது. அவுஸ்திரேலிய நாட்டுப் பெண்மணி ஆர்.எல்.ஹரிசன் சைவத்தமிழ்ப் பண்பாட்டினை வளம் சேர்க்கும் வகையில் நெற்றியிலே திருநீறும், கழுத்தினிலே உருத்திராக்கமும் அணிந்து, மெல்லிய மஞ்சள் நிற ஆடையுடன் திருவாளர் இராமநாதன் பணியை காவினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சேர். பொன் இராமநாதனால் நிறுவபப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் உருவாக்கப்பட்டதை நினைவு கூர்ந்து, வருடந்தோறும் லேடி இராமநாதனின் நினைவுப் பேருரை ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது. எனினும் லேடி இராமநாதன் வரலாறு மற்றும் பெருமைகள் சரியாக தொகுக்கப்பட்ட பதிவுகளை கண்டறிய முடியவில்லை.


திருவாளர் இராமநாதன் புகழில் லேடி இராமநாதன் ஒளி வீசப்படுவதாகவே பொதுப்பார்வையில் அறிய முடிகின்றது. எனினும் ‘கர்மயோகி: லேடி இராமநாதன்’ எனும் நூல் திருவாளர் இராமநாதன் மீதான ஒளி வீச்சில் லேடி இராமநாதனின் பிரதான பங்களிப்பு சுட்டிகாட்டப்பட்டுள்ளது. இது ஆய்வு மாணவர்களுக்கு எதிர்கால ஆய்வுக்கான ஒரு தலைப்பை வழங்குவதாகவே உணரக்கூடியதாக உள்ளது. இந்நூலுருவாக்கம் ஆறு. திருமுருகன் ஐயாவின் அனுபவத்தையும், ஐயாவின் ஆழமான மனிதத் தொடர்புகளையும் இனங்காட்டுகிறது. இணுவில் இராமநாதன் கல்லூரியில் லேடி இராமநாதன் அதிபராக செயற்பட்ட காலத்தில் சிறுமியாக கல்வி கற்ற ஒருவர், பின்னாளில் முதுமையில் ஆறு. திருமுருகன் ஐயாவின் முதியோர் இல்லத்தில் இறுதி காலத்தை கழித்திருந்தார். அவ்அம்மையார் லேடி இராமநாதனின் முக்கியத்துவம் தொடர்பில் ஆறு. திருமுருகன் ஐயாவுடன் நிறைய உரையாடியுள்ளார். இதுவே இந்நூலுருவாக்கத்திற்கான ஆதாரமாக அமைந்தது. இந்நூல் எதிர்கால ஆய்வுக்கு ஒரு அடித்தளமாக அமைகிறது.

நூலாசிரியராக ஆறு திருமுருகன் ஐயாவின் பணி, சைவத் தமிழ் இலக்கிய உலகில் ஆவணப்படுத்தலுக்கான ஊடகமாக புத்தகத்தை பயன்படுத்தியுள்ளார். வரலாற்றை ஆவணப்படுத்தலுக்கான தேவைப்பாட்டை நன்கு உணர்ந்தவராகவே தனது சிவபூமி அறக்கட்டறையின் செயற்பாடுகளை நெறிப்படுத்தி வருகின்றார். யாழ்ப்பாண நுழைவாயிலில் நாவற்குழியில் உருவாக்கப்பட்டுள்ள அரும்பொருட்காட்சியகம் முதல் ஆலயங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவாசக அரண்மனை மற்றும் திருமந்திர அரண்மனைகள் தொட்டு திருக்குறளுக்கான வளாகம் வரையில் அதனையே உறுதி செய்கின்றது. இப்பணியின் தன்மையிலேயே இலக்கியத்தையும் ஆவணப்படுத்தலுக்கான ஊடகமாக கொண்டு நூலாசிரியராக ஆறு. திருமுருகன் ஐயா அவர்களின் நூலுருவாக்கங்கள் அமைந்துள்ளது. அமைந்து கொண்டுள்ளது.

### பதிப்பாசிரியர்:





வரலாற்றை ஆவணப்படுத்த, தொலைந்து செல்லும் பொக்கிசங்களை பாதுகாப்பதிலும் ஆறு. திருமுருகன் ஐயாவின் பங்களிப்பு உயர்வானதாகும். ஐயாவுடன் அண்மைய காலங்களில் பயணிக்க இக்கட்டுரையாளருக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்தியாவின் திருச்செந்தூரில் வருடாந்த கந்தசஷ்டி




கால சொற்பொழிவுக்கு சென்ற வேளை, சமூகவலைத்தளத்தில் (Facebook) பார்த்த செய்தியை கொண்டு ஈழத்தமிழ் மூதாதையர் ஒருவரின் பண்டைய நூலைத் தேடி அலைந்ததை பார்க்கக்கூடியதாக இருந்தது. அதுமாத்திரமின்றி யாழ்ப்பாணம் நகரில் ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துக்களை சேகரிக்கும் களஞ்சியப்படுத்தும் வளாக உருவாக்க முயற்சி ஒன்றிலும் ஈடுபட்டு வருகின்றார். வெறுமனவே நிறுவன உருவாக்கத்தில் மாத்திரமின்றி இலக்கிய மீள்பதிப்பிலும் அழியும் இலக்கியங்களையும், தொலையும் தொன்மைகளையும் பாதுகாக்கும் பதிப்பாசிரியராகவும் ஆறு. திருமுருகன் ஐயாவின் இலக்கியப் பணி அமைகின்றது.


தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவராக சைவ இலக்கிய பதிப்பில் ஆறு. திருமுருகன் ஐயா அதீத ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார். பன்னிரு திருமுறைகள், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் மற்றும் திருவாதவூரடிகள் புராணம் ஆகியன தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் பதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இது ஆழமான மற்றும் அவசியமான சைவப் பணியாகும். 21ஆம் நூற்றாண்டின் இராண்டாம் தசாப்தத்தில் ஆலயங்கள் பல்கிப் பெருகியுள்ளன. எனினும் தேவாரங்கள் அறிந்து உணர்ந்த படிக்கக்கூடியவர்களோ குறைந்து சென்றுவிட்டது. பல ஆலயங்களிலும் பதிவு செய்யப்பட்ட ஒலிக்கோர்வைகளிலேயே தேவாரங்கள் இசைக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் ஆலயங்கள் தோறும் திருமுறைகளை நூலாக பாதுகாக்கக்கூடிய வகையில், கொண்டு சேர்க்கும் பணியை ஆறு. திருமுருகன் ஐயா தலைமையில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் செயற்படுத்துவது சிறப்புக்குரிய விடயமாகும். மேலும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் ஆற்றிய கந்தபுராண சிறப்பு சொற்பொழிவின் மூன்றாம் பதிப்பு ஆறு. திருமுருகன் ஐயா பதிப்பாசிரியராக ‘கந்தபுராணச் சொற்பொழிவுகள்’ எனும் தலைப்பில் 2025ஆம் ஆண்டு அன்னையின் நூற்றாண்டு விழா நிறைவாக வெளியிடப்பட்டது.





இதன் முதல் பதிப்பு 1975ஆம் ஆண்டும் இரண்டாம் பதிப்பு 2000ஆம் ஆண்டும் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டையும் ஸ்ரீ தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபையே மேற்கொண்டுள்ளது.

சைவ சித்தாந்த சமூகமயமாக்க செயற்பாடுகளில் அதீத முனைப்புடன் செயல்பட்டவர்களாய் ஈழத்து அறிஞர்களே அறியப்படுகிறார்கள். அத்தகைய அறிஞர்களுல் வடகோவை விநாசிதம்பி வேலுப்பிள்ளை அவர்களும் குறிப்பிடத்தக்க நிலை பெறுகின்றார். நாவலர் மரபின் நீட்சியாக சைவ சித்தாந்தக் கருத்துக்களை எளிமைப்படுத்தி விளக்கும் முயற்சியில் முன்னின்று செயற்பட்ட ஈழத்தவர்களுள் வேலுப்பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர். இவர் சைவ சித்தாந்தம் சார்பாக பல்வேறு நூல்களை ஆக்கியுள்ளமையை அறிய முடிகின்றதாயினும் சித்தாந்த சைவ சங்கிரகம் என்னும் இந்நூலே இன்று கிடைக்கப்பெறுகின்றது. இவரது வரலாறும் எழுதிய நூல்கள் பற்றிய தகவல்களும் அரிதாகவே காணப்படுகின்றது. ஈழத்தமிழர் தொலைத்த தொன்மைச் சிறப்புகளில் ஒன்றாகவே வேலுப்பிள்ளை அவர்களின் வரலாறு அமைகிறது. ஆயினும் வடகோவை விநாசிதம்பி வேலுப்பிள்ளையின் இலக்கியங்களை தேடிப்பெற்று மீள்பதிப்பினூடாக பாதுகாக்கும் முயற்சியில் ஆறு. திருமுருகன் ஐயா ஈடுபட்டுள்ளார்.




ஒருவகையில் வேலுப்பிள்ளை அவர்களின் பேரன் முறையுடையராகவும் ஆறு. திருமுருகன் ஐயா காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தேடலில் வேலுப்பிள்ளை அவர்களின் நான்கு இலக்கியங்களை ஆறு. திருமுருகன் ஐயா பதிப்பாசிரியராக மீள்பதிப்பு செய்துள்ளார். ஒன்று, ‘சித்தாந்த சைவ சங்கிரகம்’ எனும் நூலினைப் பெற்று 115 ஆண்டுகளின் பின்னர் மீள்பதிப்பும் செய்துள்ளார். இரண்டு, வேலுப்பிள்ளை அவர்களின் புலமைத்துவத்தின் இன்னொரு வெளிப்பாடான ‘முப்பானூற் சுருக்கம்’ மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது.




இலங்கை அறிஞர்களுள் திருக்குறளுக்கு முதன் முதல் சிறந்த பொழிப்புரை எழுதி முப்பானூற் சுருக்கம் என்ற பெயரில் வெளியிட்டவர் இவரே என அறியப்படுகிறது. மூன்று, 'திருத்தில்லை நிரோட்டக யமக அந்தாதி' (1891) மீள்பதிப்பு பெற்றுள்ளது. இவ் அந்தாதி இந்தியாவின் சிதம்பரம் மீது பாடப்பெற்றதாக காணப்படுகிறது. நூன்கு, அண்மையில் வி.வேலுப்பிள்ளை அவர்களின் மற்றொரு புராதனமான சைவத்தமிழ் இலக்கியமான 'பரானந்த தற்பரமாலை' என்ற நூலும் ஆறு. திருமுருகன் ஐயாவால் மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், திருவண்ணாமலை ஆதீனத்திற்கு கச்சியப்ப முனிவர் அருளிச்செய்த 'தணிகைப்புராணமும் மூலமும் 1899ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இணுவில் பொ. அம்பிகைபாக உபாத்தியர் புத்துரை வழங்கி நூல் வெளியிட்டுள்ளார். ஏறத்தாழ 120 வருடங்களுக்கு பிறகு ஆறு. திருமுருகன் ஐயா 2023ஆம் ஆண்டு மீள்பதிப்பு செய்துள்ளார். நாவலர் பெருமான் மீது அன்பு கொண்ட உபாத்தியர், நாவலரின் வேண்டுதலில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆரம்பித்தார். இப்பாடசாலை சுதேசிகளால் உருவாக்கப்பட்ட இரண்டாவது பாடசாலை என்ற சிறப்பை பெறுகின்றது. சமகாலத்தில் இணுவில் இந்துக் கல்லூரி என்ற பெயரில் இயங்குகின்றது. இணுவில் இந்துக் கல்லூரியில் பொ. அம்பிகைபாக உபாத்தியர் திருவுருவச் சிலை திறப்புவிழா நினைவாகவே, ஆறு. திருமுருகன் ஐயாவால் தணிகைப்புராண புத்துரை நூல் நூற்றாண்டு இடைவெளியில் மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நூல் மிக அரியதாகும். ஒரே ஒரு நூல் உபாத்தியரின் குடும்ப மரபில் வந்தவர்கள் பாதுகாத்து வந்த நிலையிலேயே, திருமுருகன் ஐயா மீள்மதிப்பினூடாக அதன் நிலைப்பையும், வாசகர்களுக்கான பரவுகையையும் உறுதி செய்துள்ளார். இறுதிப் பகுதி சில சிதைவடைந்துள்ளதுடன், கிடைக்கப்பெற்றவையையே மீள்பதிப்பு செய்துள்ளதுடன், மிகுதி செல்லுக்கு இரையாகி விட்டது என்ற ஆதங்கத்தையும் பதிப்பாசிரியர் திருமுருகன் ஐயா நூலில் பதிவு செய்துள்ளார். ஆறு. திருமுருகன் ஐயாவின் பதிப்பாசிரியர் பணி செல்லுக்கு இரையாக காத்திருந்த இலக்கியங்களுக்கும், வரலாற்றில் மறக்கப்பட்ட பெருமைசார் இலக்கியங்களுக்கும் புத்துயிர் அளிப்பதாக அமையப் பெற்றுள்ளது. இன்றும் பலர் வீடுகளில் அறியாது பல அரிய

இலக்கியங்கள் செல்லுக்கு இரையாகும் சூழலில் காணப்படலாம். இதை பொருத்தமானவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அதன் இருப்பை பாதுகாப்பதனுடன் இன்றைய தலைமுறைக்கு கடந்த கால இலக்கியவாதிகளின் உன்னதமான படைப்புகளின் மேன்மையையும் கொண்டு செல்லக் கூடியதாக அமையும். அந்தப் பணியையே பதிப்பாசிரியராக ஆறு. திருமுருகன் ஐயா செய்து வருகின்றார். சிவபூமி பதிப்பகம் என்பதையும் நிலையான நிறுவனமாக நிறுவி வைத்துள்ளார். ஆரம்பத்தில் சிவபூமி சஞ்சிகை மற்றும் ஒரு சில நூல்களின் பதிப்புக்கள் சிவபூமி பதிப்பகத்தாலேயே மேற்கொள்ளப்பபட்டது. எனினும் சிவபூமி அறக்கட்டளையில் அதிகரிக்கும் நிறுவனங்களும் பொறுப்புகளும் ஏற்படுத்தியுள்ள பொருளாதார சுமையால் சிவபூமி பதிப்பகம் தொடர்ச்சி தன்மையை பெற முடியவில்லை. எனினும் ஆறு. திருமுருகன் ஐயா பதிப்பாசிரியராக இடையறாத செயற்பாட்டை கொண்டுள்ளார்.

## இளந்தலைமுறைக்கான வழிகாட்டி:

தலைமுறைகளை வளர்த்தல் என்பது சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் மிக முக்கியமான பணியாகும். எனினும் ஈழத் தமிழ் சமூகத்தில் தலைமுறைகளை வளர்த்தல் என்பது விமர்சனத்திற்குரியதாகவே அமைகின்றது. அரசியலில் இருந்து ஆன்மீகம் வரை தலைமுறை இடைவெளியும், எதிர்கால தலைமுறைகளை வளர்க்காமை பாரிய சவாலாக இருக்கின்றது. எனினும் தேசாந்திரியாக பல் நாட்டு பயணங்களும், பல் மனிதர் தொடர்புகளும், நிறைவான வாசிப்புக்களும் ஒன்றிணைந்த முதிர்ச்சியின் அனுபவத்தில் ஆறு. திருமுருகன் ஐயா தனது எதிர்கால தலைமுறைகளை வளர்ப்பதில் நுணுக்கமான பார்வையும் அக்கறையும் கொண்டவராக காணப்படுகின்றார். சமூக வலைத்தள யுகத்தில் இளையோர் பெரியோரை நாடுவதும், பெரியோரை பின்தொடர்வதும் வெகுவாகவே குறைந்துள்ளது. நாடும் இளையோருக்கு நல்ல வழிகாட்டியாக ஆறு. திருமுருகன் ஐயா இருந்துள்ளார் என்தை இக்கட்டுரையாளர் பயனாளியாக உறுதிபடக் கூறலாம். இலக்கியப்பணியில் ஆசிரியராக தான் நடைபோடுவது மாத்திரமின்றா இளையோருக்கான வழிகாட்டியாக எதிர்கால தலைமுறையையும் ஆறு. திருமுருகன் ஐயா கைபிடித்து நடை பழக்கின்றார்.

ஆறு. திருமுருகன் ஐயா ஆசிரியராக வெளியீடு செய்யும் அருள் ஒளி மற்றும் சிவபூமி இதழ்களில் அடுத்த தலைமுறையினரையும் இணை இதழாசிரியராக தன்னோடு இணைத்து செல்வது பெரிய பண்பாகும். இவ் இதழ்களில் பொறியியலாளர் ச.சந்தோசன் இணை ஆசிரியராக செயற்படுகின்றார். அவ்வாறே அண்மைக்கால சிவபூமியின் சிறப்பிதழ் வெளியீடுகளில் தன்னோடு பொறியியலாளர் ச.சந்தோசன் மற்றும் டெல்லி பல்கலைக்கழக கலாநிதிப் பட்ட ஆய்வு மாணவன் ஐ.வி.மகாசேனனையும் இணை ஆசிரியராக வழிகாட்டி இணைத்து செல்கின்றார். சிவபூமியின் சிறப்பு வெளியீடுகளான 'சிவபூமி திருவாசக அரண்மனை, திருவாசக அரங்க மண்டபம் திறப்பு விழா சிறப்பு மலர் 'நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூசை சிறப்பிதழ்' போன்றவற்றில் ச.சந்தோசன் மற்றும் ஐ.வி.மகாசேனன் இருவரையும் இணை ஆசிரியர்களாக பயிற்றுவித்துள்ளார்.

மேலும் ஆறு. திருமுருகன் ஐயாவின் இலக்கியப் பணி முகத்தை அடையாளப்படுத்தும் கட்டுரையை வெளியிடும் தூமி அமையத்தின் இலக்கிய செயற்பாட்டினை ஆரம்பித்து வைத்தவராகவும், தொடர்ந்து ஆர்வலராகவும் ஊக்குவிப்பாளராகவும் ஆறு. திருமுருகன் ஐயா காணப்படுகின்றார். 2016ஆம் ஆண்டு தூமி அமையத்தின் ஆரம்பம் ஆவணக் காணொளி உருவாக்கமே அமைகின்றது. பின்னாளில் சிறிதாக அறப்பணிகளிலும் ஈடுபடுகின்றது. கொரோனா முடக்கத்திலேயே மின்னிதழ் யுக துரித வளர்ச்சியில் ஏற்பட்ட ஆர்வம், 2020ஆம் ஆண்டு முதல் 'தூமி மின்னிதழ்' இளையோரின் ஆக்கங்களை தொகுத்து வரும் இலத்திரனியல் சஞ்சிகை உருவாகியது. இதன் முதல் வெளியீடு கொரோனா முடக்க காலத்தில் திருவாசக அரண்மனையில் ஆறு. திருமுருகன் ஐயாவால் வெளியிடப்பட்டது. இன்று வரை 90களை தாண்டிய இதழ் வெளியிடப்பட்டுள்ளது. தனது வேலைப்பளுவிற்குள்ளும் தூமி மின்னிதழ் பற்றிய கருத்துக்களையும் ஊக்குவிப்புக்களையும் தொடர்ந்து மின்னிதழ் ஆசிரியருக்கு கூறி வருகின்றார். இப்பின்புலத்திலேயே **ஆறு. திருமுருகன் ஐயாவின் இலக்கிய பணியை முழுமையான ஆய்வுக்கான தலைப்பாக ஆய்வாளர்களிடையே திறந்து விட வேண்டும் என்ற விருப்பில் இக்கட்டுரையும் உருவாக்கப்பட்டுள்ளது.**

# இலங்கை மகளிர் அணியில் மன்னார் வீராங்கனை சஜிந்தினி



இலங்கைக்கு வருகை தந்துள்ள நியூஸிலாந்து மகளிர "ஏ" அணியை ஒருநாள் கிரிக்கெட் தொடரில் எதிர்த்தாடவுள்ள இலங்கை மகளிர் "ஏ" அணியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் புனித பற்றிமா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவி சதீஸ்குமார் சஜிந்தினி பெயரிடப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவ னத்தினால் நடத்தப்பட்ட திறன் தேடல் திட்டத்தின்போது சதீஸ்குமார் சஜிந்தினியின் ஆற்றல் இனங் காணப்பட்டதாக முன் னாள் முதல் தர கிரிக்கெட் வீரரும் மகளிர் அணி பயிற்றுநருமான ஹேமன்த தேவப்ரிய தெரிவித்தார். வலதுகை வேகப்பந்துவீச்சா ளரான சஜிந்தினி, சற்று வேகமாக பந்துவீசக்கூடியவர் எனவும் போட்டி அனுபவங்களின் மூலம் இன்னும் முன்னேற்றம் அடைவார் என நம்புவதாகவும் தேவப்ரிய கூறினார்.

இந்தத் தொடருக்கான 15 பேர் கொண்ட குழாத்தின் தலைவி யாக சத்யா சந்தீபனி நியமிக்கப் பட்டுள்ளதுடன் தேசிய மற்றும் இளையோர் மகளிர் அணிகளில் விளையாடிய வீராங்கனைகள் பலரும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

# 2026 ஆம் ஆண்டுக்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் 65ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரது பிறந்தநாள் அறநிதியச் சபையினால் நடத்தப்படும் “இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது – 2026” வழங்கும் வைபவம் எதிர்வரும் 2026 மே 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அமைந்துள்ள அன்னபூரணி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்று காலை 9.00 மணிக்கு ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில், காலை 9.10 மணிக்கு மங்கல விளக்கேற்றலும், அதனைத் தொடர்ந்து 9.15 மணிக்கு திருமுறை பாராயணமும் இடம்பெறவுள்ளன. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் செயலாளர் திரு. இ. இராதாகிருஷ்ணா (J.P) வரவேற்புரையினை நிகழ்த்த, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள் மற்றும் நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையுரையும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் திரு. சி. குணசீலன் அவர்களின் வாழ்த்துரையும் இடம்பெறவுள்ளன. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் திரு. க. தேவகாந்தன் தம்பதியினரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் த. திருவரன் தம்பதியினரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

காலை 10.30 மணியளவில் கல்வி மற்றும் சமூகம் சார்ந்த விசேட கௌரவிப்பு நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. அந்தவகையில், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்த மாணவன் செல்வன். தெய்வவேந்திரன் திருக்குமரன் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டிற்கான புகழ்பெற்ற ”இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது – 2026” வழங்கும் பிரதான நிகழ்வு நடைபெறும். ஆற்றலாளர் அறிமுக உரையைத் தொடர்ந்து, இந்த ஆண்டிற்கான விருது பெறுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரு முக்கிய ஆளுமைகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பின் (LEARN) பிரதம நிறைவேற்று அதிகாரியும் (CEO), பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் கணினி பொறியியல் துறைப் பேராசிரியருமான ரொஷான் பு. ராகல் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் மகப்பேறு மற்றும் பெண்நோயியல் பேராசிரியரும் சிறப்பு வைத்திய நிபுணருமான சிவலிங்கராஜா ரகுராமன் ஆகிய இருவருக்கே இந்த உயரிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.







நிகழ்வின் நிறைவாக முற்பகல் 11.45 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் உப செயலாளர் பொறியியலாளர் ச. சந்தோஷன் அவர்களின் நன்றியுரை இடம்பெறும். தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு வருகை தந்த அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீகப் பெரியோர்கள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் அன்போடு கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.


அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு



# நீர் வள பாதுகாப்பின் அவசியம்

சீதாராமன் அபிலாசனி
3 ம் வருடம்
புவியியற் சிறப்பு கலை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

நீர் என்பது வாழ்வின் அடிப்படை மூலதனம். மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் அனைத்தும் நீரைத் தவிர வாழ முடியாது. உலகளாவிய அளவில் நீர் தேவைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. உலகின் மக்கள் தொகை விரைவாக அதிகரிப்பதால், குடிநீர், வேளாண்மை, தொழில்துறை மற்றும் ஆற்றல் உற்பத்தி போன்றவற்றிற்கு தேவையான தண்ணீர் அளவும் பெருகுகிறது. அதே சமயம், காலநிலை மாற்றங்கள், மழை குறைவு மற்றும் மாசுபட்ட நீர் மூலங்கள் நீர் குறைபாட்டுக்கு வழிவகுக்கின்றன. இதனால், நீர் வளங்களை பாதுகாக்கும் அவசியம் தற்போது முக்கியத் தேவையாக மாறியுள்ளது.

நீரின் மாசுபாடு முக்கிய பிரச்சினையாக உள்ளது. தொழிற்சாலை கழிவுகள், வீட்டு கழிவுநீர், விவசாய இரசாயனங்கள் நேரடியாக நதிகள், ஏரிகள் , குளங்கள் மற்றும் தரைகளுக்குள் கலக்கின்றன. இதனால் குடிநீர், விவசாயம் மற்றும் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவின்படி, மாசுபட்ட நீர் காரணமாக ஆண்டு தோறும் லட்சக்கணக்கான

மக்கள் நீர் நோய்கள் காரணமாக பாதிக்கப்படுகின்றனர். இதன் மூலம், நீர் வளங்களை பாதுகாக்கும் நோக்கில் நிரந்தர முறைகள் உடனடியாக தேவையாகின்றன. நீர் பாதுகாப்பு என்பது வெறும் பயன்பாட்டிற்கு மட்டுமல்ல் அதனை நிரந்தரமாக சீரான முறையில் பயன்படுத்துவதைச் சேர்ந்தது. குடிநீர் சேமிப்பு, மழைநீர் சேகரிப்பு, நீர் மீள்சுழற்சி, கலப்பட நீர் சுத்திகரிப்பு ஆகிய நடைமுறைகள் எல்லாம் இதற்காக முக்கியமாகும். வேளாண்மையில் தண்ணீர் காப்பு முறைகளை பின்பற்றுவதன் மூலம் நீர் வீணாகாமல் நீர் வளத்தை நிலைத்துவைக்கலாம். தொழில்துறைகளிலும் கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவது நீர் பாதுகாப்பின் ஒரு முக்கிய நடவடிக்கை ஆகும்.

மாணவர்களும் பொதுமக்களும் நீர் பாதுகாப்பில் அவசியமான பங்காற்ற வேண்டும். வீட்டு நிலங்களில் நீர் சேமிப்பு, பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் கழிவுகளை நீரில் வீசுவது போன்றவற்றை தவிர்த்தல் போன்ற செயற்பாடுகள் நீர் வளத்தை பாதுகாக்க உதவும். அரசு மட்டுமல்ல, தனியார் நிறுவனங்களும் நீர் பாதுகாப்பில் தங்களின் பொறுப்பை ஏற்க வேண்டும். நீர் வளங்களை பாதுகாப்பது எதிர்கால தலைமுறைக்கு சுத்தமான நீரை உறுதி செய்யும் முக்கிய வழியாகும்.

முடிவாக, நீர் என்பது உயிரின் மூலதனம். இதனை பாதுகாத்தல் எமது கடமை மட்டுமல்ல, வாழ்வின் தேவையும் ஆகும். சரியான நீர் மேலாண்மை, மாசுபாட்டை தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் மக்கள் விழிப்புணர்வு ஆகியவை இணைந்து செயல்பட்டால் மட்டுமே நீர் வளங்கள் நிலைத்திருக்க முடியும். இது நம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும், நீர் குறைபாட்டை சமாளிக்கவும் உதவும். எனவே, இன்று நீர் பாதுகாப்பில் எடுத்து கொள்ளும் நடவடிக்கைகள் நாளைய நாளில் எமது வாழ்வின் எதிர்காலத்தை பாதுகாக்கும்.





# சிறகுகள் முளைக்கும் சிகரங்கள்.
# விசேட தேவையுடைய மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலம்

முரளிதரன் ஷாம்பவி
மூன்றாம் வருடம்
உளவியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்

“இயலாமை என்பது உடலிலில்லை, அது எண்ணத்தில்தான் உள்ளது” என்ற பொன்மொழிக்கு ஏற்ப, இன்றைய உலகம் மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. விசேட தேவையுடைய மாணவர்கள் என்பவர்கள் ஏதோ ஒரு வகையில் குறைந்தவர்கள் அல்ல, மாறாக அவர்கள் மாற்றுத்திறன் கொண்டவர்கள். ஒரு காலத்தில் வீட்டுக்குள்ளேயே முடக்கி வைக்கப்பட்ட இந்த முத்துக்கள், இன்று கல்வியறிவு மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் துணையோடு சமுத்திரத்தை ஆளத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களது எதிர்காலம் என்பது வெறும் வாழ்வாதாரம் சார்ந்தது மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் முதிர்ச்சியை அளவிடும் தராசாகவும் அமைகிறது. மாறிவரும் கல்விச் சூழலும் உள்ளீர்ப்புக் கல்வியும். விசேட தேவையுடைய மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முதல் படி ‘உள்ளீர்ப்புக் கல்வி’ (Inclusive Education) ஆகும். சாதாரண மாணவர்களோடு இவர்களையும் இணைத்து கற்பிக்கும் முறை, இவர்களிடையே “நாங்களும் சமூகத்தின் ஒரு அங்கமே” என்ற நம்பிக்கையை விதைக்கிறது. நவீன கல்வி முறையில்

இவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக பாடத்திட்டங்கள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது இவர்களுக்கு மன அழுத்தமில்லாத கற்றல் சூழலை உருவாக்கி, உயர்கல்வியை நோக்கி இவர்களைத் தடையின்றி பயணிக்க வைக்கிறது தொழில்நுட்பம் வழங்கும் மந்திரக் கோல். விசேட தேவையுடைய மாணவர்களின் எதிர்காலத்தை பிரகாசமாக்குவதில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு அளப்பரியது. பார்வைச் சவால் உள்ளவர்களுக்கு: திரையை வாசிக்கும் மென்பொருட்கள் (Screen Readers) மற்றும் பிரெய்லி தட்டச்சு வசதிகள் உலக அறிவை அவர்கள் விரல் நுனிக்குக் கொண்டு வந்துள்ளன. செவிப்புலன் சவால் உள்ளவர்களுக்கு: சைகை மொழியை உரையாக மாற்றும் செயலிகள் மற்றும் நவீன செவிப்புலன் கருவிகள் தொடர்பாடல் தடையை உடைத்துள்ளன. உடல் இயக்க சவால் உள்ளவர்களுக்கு: செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் சக்கர நாற்காலிகள் மற்றும் குரல் வழி கட்டளைக் கருவிகள் அவர்களைச் சுதந்திரமாக இயங்க வைக்கின்றன.

இந்தத் தொழில்நுட்பப் புரட்சி, இம்மாணவர்களை மற்றவர்களிடம் தங்கியிருக்கும் நிலையிலிருந்து மாற்றி, சுயசார்புள்ளவர்களாக மாற்றுகிறது. வேலைவாய்ப்பில் புதிய கதவுகள். முற்காலத்தில் விசேட தேவையுடையோருக்கான வேலைவாய்ப்பு என்பது கைவினைப் பொருட்கள் செய்வதோடு நின்றுவிட்டது. ஆனால் இன்று கணினித்துறை, வங்கித்துறை, கலை மற்றும் ஊடகத்துறை என அனைத்துத் துறைகளிலும் இவர்கள் தடம் பதித்து வருகின்றனர். பல பன்னாட்டு நிறுவனங்கள் (MNCs) 'பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்' (Diversity and Inclusion) என்ற கொள்கையின் கீழ் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன. குறிப்பாக, வீட்டிலிருந்தே வேலை செய்யும் (Work From Home) வசதி இவர்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இவர்களது பொறுமை, விடாமுயற்சி மற்றும் ஒருமுகப்படுத்தும் திறன் ஆகியவை நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சமூகக் கண்ணோட்டத்தில் ஏற்பட வேண்டிய மாற்றம். விசேட தேவையுடைய மாணவர்களின் எதிர்காலம் என்பது வெறும் சலுகைகளை மட்டும் சார்ந்தது அல்ல, அது அங்கீகாரத்தைச் சார்ந்தது. சமூகம் இவர்களைப் பரிதாப உணர்வுடன் (Sympathy) பார்ப்பதை விடுத்து, சமத்துவ உணர்வுடன் (Empathy) பார்க்க வேண்டும். இவர்களுக்கான பௌதிகத் தடைகளான சரிவுப் பாதைகள், விசேட போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல, அது ஒவ்வொரு

குடிமகனின் சமூகப் பொறுப்பாகும். சமுதாயம் இவர்களைக் கொண்டாடும் போது, இவர்களது எதிர்காலம் தானாகவே ஒளிபெறும். உளவியல் பலமும் தன்னம்பிக்கையும். எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் மனதிடம் இம்மாணவர்களுக்கு மிக அவசியம். இதற்குக் குடும்பத்தின் ஆதரவு மிக முக்கியமானது. “உன்னால் முடியும்” என்று பெற்றோர் கொடுக்கும் சிறு ஊக்கம், அவர்களை இமயமலையின் உச்சிக்குக் கூட அழைத்துச் செல்லும். தோல்விகளைக் கண்டு துவளாமல், தங்களது பலவீனத்தையே பலமாக மாற்றிக் கொள்ளும் மனப்பக்குவம் இவர்களது எதிர்கால வெற்றியை உறுதிப்படுத்தும்.

விசேட தேவையுடைய மாணவர்கள் என்பவர்கள் வானத்தில் மின்னும் துருவ நட்சத்திரங்கள் போன்றவர்கள். அவர்களுக்குச் சரியான வாய்ப்புகளும், தடைகளற்ற சூழலும், அன்பான அங்கீகாரமும் கிடைத்தால், அவர்கள் தொட முடியாத சிகரங்களே இல்லை. சவால்களைத் தகர்த்து, சாதனைகளைச் சரித்திரமாக்கும் வல்லமை கொண்ட இம்மாணவர்களின் எதிர்காலம், மிகச் சிறந்த ஒரு மறுமலர்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவர்களின் கரங்களைப் பற்றிக் கொள்வது மட்டுமல்ல, அவர்களது கனவுகளுக்குச் சிறகுகள் கொடுப்பதே ஆகும்





# வைபவ் சூரியவன்ஷி எனும் சூறாவளி

நவீன கிரிக்கெட்டின் போக்கு அசாதாரணமான இளம் திறமையாளர்களின் வருகையால் அடிக்கடி மாற்றியமைக்கப்படுகிறது. ஆனால், தற்போதைய கிரிக்கெட் உலகம் பீகாரைச் சேர்ந்த இடதுகை பேட்டிங் புயலான வைபவ் சூரியவன்ஷியின் (Vaibhav Sooryavanshi) அசுர வேக வளர்ச்சியைப் போல ஒரு நிகழ்வை இதற்கு முன்பு பார்த்ததில்லை. பெரும்பாலான பதின்ம வயது சிறுவர்கள் தங்களின் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைத் தொடங்கும் வயதில், இந்த இளம் வீரர் உயர்தர கிரிக்கெட்டின் எல்லைகளை மீண்டும் வரையறுத்து வருகிறார். வீட்டின் கொல்லைப்புறப் பயிற்சியில் தொடங்கி இன்று ஒரு புகழ்பெற்ற தொழில்முறை ஆட்டக்காரராக மாறியுள்ள அவரது பயணம், சமகால விளையாட்டு வரலாற்றின் மிக உன்னதமான கதைகளில் ஒன்றாகும்.

## தொடக்கப் புள்ளியும் அசுர வளர்ச்சியும்

2011 ஆம் ஆண்டு மார்ச் 27 அன்று பீகாரின் சமஸ்திபூர் மாவட்டத்தில் உள்ள தாஜ்பூர் என்ற சிறிய கிராமத்தில் பிறந்த சூரியவன்ிக்கு, நடக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே கிரிக்கெட் மீதான ஆர்வம் தொற்றிக்கொண்டது. தனது நான்கு வயதுக் குழந்தையின் அசாத்திய ஆர்வத்தைக் கண்ட அவரது தந்தை, வீட்டிற்குப் பின்னால் ஒரு சிறிய தற்காலிகப் பயிற்சிப் பகுதியை அமைத்துக் கொடுத்தார். இந்த ஆரம்பகால ஆதரவு, இந்த இளம் இடதுகை ஆட்டக்காரருக்கு இயல்பாகவே அச்சமற்ற, ஆக்ரோ' மான பேட்டிங் பாணியை வளர்க்க உதவியது. தனது ஒன்பதாவது

வயதில் சமஸ்திபூரில் உள்ள முறையான கிரிக்கெட் அகாடமியில் சேர்ந்தார். அங்கு அவரது அசாத்திய பலத்திற்கு ஏற்றவாறு பேட்டிங் நுட்பங்களும் மெருகேறின.

உள்நாட்டு கிரிக்கெட்டில் அவரது வளர்ச்சி அசுர வேகத்தில் இருந்தது. தனது 12 ஆவது வயதில், பீகார் 19 வயதுக்குட்பட்டோருக்கான (Under-19) அணிக்காக வினூ மான்கட் தொடரில் விளையாடி, வெறும் ஐந்து போட்டிகளில் கிட்டத்தட்ட 400 ரன்களைக் குவித்து அசத்தினார். இந்த அதிரடி ஆட்டம் மூத்த தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்தது. இதன் விளைவாக, 1986 ஆம் ஆண்டிற்குப் பிறகு புகழ்பெற்ற ரஞ்சி டிராபி (Ranji Trophy) முதல்தர கிரிக்கெட் போட்டியில் அறிமுகமான இரண்டாவது மிக இளம் வயது வீரர் என்ற பெருமையைப் பெற்றார். தனது 14 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு முன்பே, 'லிஸ்ட் ஏ' கிரிக்கெட்டில் விளையாடிய மிக இளம் வயது இந்தியர் மற்றும் அந்த வடிவத்தில் அரைசதம் அடித்த மிக இளம் வீரர் ஆகிய வரலாற்றுச் சாதனைகளைத் தன்வசப்படுத்தினார்.

## சர்வதேச அரங்கில் அதிர்வலைகள்



சர்வதேச அளவிலான இளையோர் போட்டிகளும், ஐபிஎல் (IPL) ஏலமும் இவரை உலக அரங்கில் வெளிச்சம்போட்டுக் காட்டின. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், சென்னையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய அணியில் விளையாடிய அவர், வெறும் 58 பந்துகளில் சதம் அடித்து மிரட்டினார். இந்த அதிரடி ஆட்டம், இந்தியன் பிரீமியர் லீக் (IPL) மெகா ஏலத்தில் பெரும் போட்டியை ஏற்படுத்தியது. இறுதியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி இந்த இளம் வீரரை ₹1.10 கோடிக்கு வாங்கியது. இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் ஒப்பந்தம் செய்யப்பட்ட மிக இளம் வயது வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.




லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிரான தனது அறிமுகப் போட்டியில், வெறும் 14 ஆண்டுகள் மற்றும் 23 நாட்களேயான நிலையில் களமிறங்கிய சூரியவன்ஷி, தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்து தனது வருகையைப் பதிவு செய்தார். சில நாட்களுக்குப் பிறகு, குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு எதிராக 38 பந்துகளில் 101 ரன்கள் குவித்து, டி20 மற்றும் ஐபிஎல் வரலாற்றில் மிக இளம் வயதில் சதம் அடித்தவர் என்ற சாதனையை முறியடித்தார்.

அவரது சாதனைகளின் உச்சம் 2026 பிப்ரவரியில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பைத் தொடரில் வெளிப்பட்டது. ஏழு போட்டிகளில் 439 ரன்கள் குவித்த அவர், ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப்பில் இங்கிலாந்துக்கு எதிரான இறுதிப் போட்டியில் ஒரு வரலாற்று இன்னிங்ஸை ஆடினார். வெறும் 80 பந்துகளில் 15 பவுண்டரிகள் மற்றும் 15 அசாத்திய சிக்ஸ ர்களுடன் ஆட்டமிழக்காமல் 175 ரன்கள் குவித்து, இந்திய அணி 100 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெறக் காரணமானார்.

இது உலகக் கோப்பை இறுதிப் போட்டி வரலாற்றில் ஒரு வீரரின் அதிகபட்ச தனிநபர் ஸ்கோர் ஆகும். இந்த அரிய சாதனைக்காக அவருக்கு இந்திய குடியரசுத் தலைவரால் “பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஸ்கார்“ விருது வழங்கப்பட்டது. மேலும் ஜூன் 2026 இல் இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்புத் தொடருக்கான இந்திய ‘ஏ’ அணியிலும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### ஜாம்பவான்களின் பார்வையில் சூரியவன்ஷி

மைதானத்திற்கு வெளியே பிரியாணி மற்றும் இனிப்புகளை விரும்பி உண்ணும் ஒரு சாதாரண சிறுவனாகவும், மைதானத்திற்குள் நுழைந்ததும் பந்துவீச்சாளர்களைப் பந்தாடும் அதிரடி வீரராகவும் விளங்கும் சூரியவன்ஷியின் இந்த பன்முகம் சர்வதேச கிரிக்கெட் ஜாம்பவான்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.



தென்னாப்பிரிக்க அணியின் முன்னாள் கேப்டன் *ஏபி டி வில்லியர்ஸ்* (AB de Villiers) மற்றும் வேகப்பந்து வீச்சு ஜாம்பவான் *டேல் ஸ்டெய்ன்* (Dale Steyn) ஆகியோர் தங்களது யூடியூப் பக்கத்தில், இந்த இளம் வீரரை ”அச்சமற்றவர் மற்றும் துணிச்சலானவர்” என்று பாராட்டியுள்ளனர். பந்துவீச்சாளர்களின் உத்திகளைத் தவிடுபொடியாக்கும் திறன் இவரிடம் உள்ளதாக டி வில்லியர்ஸ் குறிப்பிட்டுள்ளார். அதேபோல், இந்தியாவின் மூத்த சுழற்பந்து வீச்சாளர் *ரவிச்சந்திரன் அஸ்வின்*, சூரியவன்ஷி இந்திய ‘ஏ’ அணியில் சேர்க்கப்பட்டதன் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார். இதுபோன்ற கடினமான சூழல்களில் விளையாடும் அனுபவமே அவரை எதிர்காலத்தில் மூத்த இந்திய தேசிய அணியில் விளையாட தகுதியுடையவராக மாற்றும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சேர் டான் பிராட்மேனுடன் ஓர் பார்வை

விளையாட்டு ஆய்வாளர்கள் இத்தகைய அசாத்திய திறமையாளர்களை வரலாற்று ரீதியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கிரிக்கெட் உலகம் கண்ட மிகச் சிறந்த பேட்ஸ்மேனான சேர் டான் பிராட்மேனின் (Sir Don Bradman) நினைவே நம் அனைவருக்கும் எழுகிறது.

நவீன கால டி20 அதிரடி ஆட்டக்காரரை, 20 ஆம் நூற்றாண்டின் பாரம்பரிய டெஸ்ட் ஜாம்பவானுடன் ஒப்பிடுவது சற்று வியப்பாக இருந்தாலும், இருவருக்கும் இடையே உள்ள பொதுவான அம்சம் என்னவென்றால், கிரிக்கெட்டின் தற்போதைய ரன் குவிக்கும் முறைகளை முற்றிலும் மாற்றி அமைத்ததே ஆகும். பிராட்மேன் தனது அசாத்திய திறமையால் 99.94 என்ற சராசரியைக் கொண்டு மற்ற வீரர்களிடமிருந்து தனித்து நின்றார். சூரியவன்ஷியும் தனது இளம் வயதிலேயே அசாத்திய ரன் குவிக்கும் வேகத்தின் மூலம் அதேபோன்ற ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

பிராட்மேன் தனது சிறு வயதில் ஒரு சிறிய கோல்.்.ப் பந்தை ஸ்டம்ப் மூலம் சுவரில் அடித்து தனது கண் மற்றும் கைகளின் ஒருங்கிணைப்பை மெருகேற்றினார். அதேபோல், சூரியவன்ஷ ியும் தனது கிராமத்து கொல்லைப்புறத்தில் வளர்ந்த வீரர்களின் பந்துவீச்சை எதிர்கொண்டு தனது பேட்டிங் திறனை வளர்த்துக் கொண்டார்.இருப்பினும், பிராட்மேன் தரையோடு தரையாக நேர்த்தியாக ரன்களைக் குவித்த இடத்தில், சூரியவன்ஷி பந்துகளை வானத்தில் பறக்கவிடும் நவீன கால அதிரடியைப் பிரதிபலிக்கிறார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பைத் தொடரில் அதிக சிக்ஸர்கள் அடித்த சாதனையையும், ஐபிஎல் போட்டியில் ஒரு இன்னிங்ஸில் 11 சிக்ஸர்கள் அடித்த இந்திய வீரரின் சாதனையையும் இவர் சமன் செய்துள்ளார். பிராட்மேன் தனது அசைக்க முடியாத நிலைத்தன்மையால் கிரிக்கெட்டை மாற்றியமைத்தார் சூரியவன்ஷி காலத்தைக் சுருக்கி, ஒரு மூத்த பேட்ஸ்மேன் தனது 25 வயதில் எட்ட நினைக்கும் முதிர்ச்சியைத் தனது 14 வயதிலேயே சாதித்துக் காட்டியுள்ளார்.

காலி மற்றும் தம்புள்ளை மைதானங்களில் அவர் தனது அடுத்த இன்னிங்ஸிற்குத் தயாராகும் வேளையில், கிரிக்கெட் உலகம் இந்த இளம் புயலின் ஆட்டத்தைக் காண ஆவலோடு காத்திருக்கிறது.

